FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, மார்ச் - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

| தரம் :- 12 (2021) | பரதநாட்டியம் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. இறைபுகழை கவிச்சொற்கட்டில் பாடி அபிநயிக்கும் உருப்படி.
 1) கௌத்துவம் 2) அலாரிப்பு 3) சப்தம் 4) புஷ்பாஞ்சலி 5) வர்ணம்

02. பாடகர் சபையோர் மெச்சும்படி பாடும்போது பெண்கள் அபிநயிக்கும் வாச்சிகம்
 1) உபசப்த 2) சுசப்த 3) சுகீத 4) சுசப்த 5) உபகீத

03. விஷம யதியை விளக்கும் இசைக்கருவி.
 1) புல்லாங்குழல் 2) முரசு 3) சங்கு
 4) மிருதங்கம் 5) உடுக்கு

04. கதகளி உருவாவதற்கு முன்னோடியாக இருந்த நாடகப்பாணி.
 1) கிருஸ்ணனாட்டம் 2) ராமனாட்டம் 3) பகவதியாட்டம்
 4) தெருக்கூத்து 5) கூடியாட்டம்

agaram.lk

05. "கோஷயாத்ரா" என்ற நூலின் ஆசிரியர்.
 1) திருமாளிகைத்தேவர் 2) குஞ்சன் நம்பியார்
 3) கார்த்திகைத்திருநாள் மகாராஜா 4) நாராயணன் நம்பூதிரி 5) சாந்தாராவ்

06. "பிராணிமித்ரா" என அழைக்கப்பட்ட கலைஞர்.
 1) ஈ.கிருஷ்ணையர் 2) அருணாசல நட்டுவனார்
 3) மயிலாப்பூர் கௌரி அம்பாள் 4) ருக்குமணிதேவி அருண்டேல்
 5) சுப்பராய நட்டுவனார்

07. சதிர் என அழைக்கப்பட்ட தமிழக ஸாஸ்திரிய நடனத்திற்கு பரதநாட்டியம் எனும் பெயர் சூட்டுவதற்கான தீர்மானத்தை முன்மொழிந்தவர்.
 1) சின்னையா 2) பொன்னையா 3) ஈ. கிருஷ்ணையர்
 4) சிவானந்தம் 5) வடிவேலு

08. தாளம் தொடங்கியபின் பாட்டு ஆரம்பிக்கும் எடுப்பு.
 1) அனாகதம் 2) அதீதம் 3) சம 4) புளுதம் 5) காகபாதம்

09. நாட்டிய ஸாஸ்திரத்தில் மண்டலங்கள் பற்றிக் கூறப்படும் அத்தியாயம்.
 1) 11 2) 12 3) 14 4) 15 5) 16

10. கதகளி ஆடல் பற்றி விளக்கும் நூல்.

1) ஹஸ்தமுத்ராவளி 2) அபிநயசார சம்புடம் 3) அபிநயதர்ப்பணம்
4) ஹஸ்தலக்ஷண தீபிகா 5) அபிநய நவநீதம்

11. பசுவின்வால் போல் என கூறப்படும் யதி?

1) ஸ்ரோதேவகயதி 2) கோபுச்சயதி 3) டமருகயதி
4) விஷம யதி 5) மிருதங்க யதி

12. வேங்கட மகி எழுதிய நூல்

1) சங்கிரக சூடாமணி 2) சதுர்த்தண்டிப்பிரகாசிகை 3) சங்கீதசாரம்ருதம்
4) சிலப்பதிகாரம் 5) அபிநயசாரசம்புடம்

13. ; ; , த,திங், கி,ணா தொம் த,திங்,கி,ணா தொம் ததிங்,கி,ணாதொம் இத் ததிங்கிணதொம் அமைந்த ஜாதி.

1) திஸ்ரம் 2) கண்டம் 3) சதுஸ்ரம் 4) சங்கீர்ணம் 5) மிஸ்ரம்

14. இரு நூறு ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் வைணவத்தை ஏற்றுக்கொண்ட முதல் பணிப்பூர் அதிபர்.

1) இராமநந்தர் 2) இராஜஸ்ரீ பாக்கியச் சந்திரா 3) நரோமத்தமர்
4) கரீப்நவாஸ் 5) தோம்பா ஹயோபம்

15. ஸாத்விகா அபிநயத்தில் ஸ்வேத என்பது.

1) ஸ்தம்பித்தல் 2) வியர்த்தல் 3) குரல்மாற்றம்
4) நடுங்குதல் 5) நிறமாற்றம்

16. ஆறுவகை யதிகளுக்கு இணங்க வருவது.

1) சம்யோகமேரு 2) குருமேரு 3) புலுதமேரு
4) ஜதிபிரஸ்தாரம் 5) காகபாதமேரு

agaram.lk

17. பரதநாட்டியத்தில் அடவு போல் கதக் நடனத்தில்

1) தரண 2) பரன் 3) சுவடு 4) தூன் 5) சௌகன்

18. தகததிங்கிணதொம் தகததிங்கிணதொம் தகததிங்கிணதொம் இதன் யதி அமைப்பு.

1) கோபுச்ச யதி 2) டமருயதி 3) ஸ்ரோதேவக யதி
3) சமயதி 5) விஷமயதி

19. க.பொ.த உயர்தர வகுப்பு ஷண்முகப்பிரியா கீர்த்தனையினை நடன ஆக்கம் செய்தவர்.

1) அடையாறு கே.லக்ஷ்மணன் 2) திருமதி. கிருஷாந்தி ரவீந்திரா
3) திருமதி. பத்மினி செல்வேந்திரகுமார் 4) திருமதி. சாந்தினி சிவநேசன்
5) திருமதி. லீலாம்பிகை செல்வராசா

20. பரதக்கலை மறுமலர்ச்சியின் தந்தை என போற்றப்பட்டவர்.

1) சின்னையா 2) ஈ.கிருஷ்ணையர் 3) அருண்டேல்
4) மீனாட்சி சுந்தரம்பிள்ளை 5) சுப்பராயநட்டுவனார்.

(20X1=20புள்ளிகள்)

## பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01) 1) பரதநாட்டியக் கச்சேரியில் இடம்பெறும் முதலாவது நிருத்த உருப்படி யாது. (1 புள்ளி)

2) அவ்வுருப்படியின் இராகம் யாது? (1 புள்ளி)

3) அவ்வுரப்படியின் லக்விணத்தை தருக. (8 புள்ளிகள்)

4) அவ்வுருப்படியினை தாள அங்கக் குறியீட்டில் எழுதுக. (10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02) 1) "அபிநய அரசி" என போற்றப்படும் கலைஞரின் வாழ்க்கைப் பின்னணியையும் அவரது கலைத்தொண்டினையும் தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

03) 1) இராகங்களின் பிரிவுகள் எவை. (2 புள்ளிகள்)

2) 72 மேள இராகங்களின் அமைப்பு முறையினை பின்வரும் அம்சங்கைள அடிப்படையாகக் கொண்டு விபரிக்க.

- வரலாறு அமைப்பு (8 புள்ளிகள்)
- ஸ்வரஸ்தானம் (10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk

04) சிறுகுறிப்பு

1) யதி

2) அபிநயத்தில் திரியாங்கம்

3) அலாரிப்பு

4) சப்ததாளங்கள் 35 தாளங்களாகும் முறை

(4x5=20 புள்ளிகள்)

05) கதக் நடனத்தை பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

- தோற்றமும் வளர்ச்சி (6 புள்ளிகள்)
- ஆட்ட முறை (6 புள்ளிகள்)
- இசை பக்கவாத்தியம் (4 புள்ளிகள்)
- ஆடை அணிகலன்கள் (4 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)